සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**14 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023 (2024)

කතෝලික ධර්මය I, II
கத்தோலிக்கத் திருமறை I, II
Catholicism I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## கத்தோலிக்கத் திருமறை I

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** "அவர் ஓர் வரலாற்று ஆசிரியர், ஓவியக் கலைஞர், அதே போன்று வைத்தியருமாவார்." இவ்வாறு அறிமுகம் செய்யப்படுபவர்,
(1) புனித மாற்கு ஆவார். (2) புனித மத்தேயு ஆவார்.
(3) புனித லூக்கா ஆவார். (4) புனித யோவான் ஆவார்.

**2.** புதிய ஏற்பாட்டில் அதிகமான நூல்கள் எழுதப்பட்டிருப்பது
(1) புனித மத்தேயுவால் ஆகும். (2) புனித யோவானால் ஆகும்.
(3) புனித யாக்கோபுவால் ஆகும். (4) புனித பவுலால் ஆகும்.

**3.** "உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்" என்று இறைவன் சாலமோன் அரசனிடம் எவ்விடத்தில் வினவினார்?
(1) கிபயோனில் (2) பெத்தேலில்
(3) அமோனில் (4) யெரிக்கோவில்

**4.** இயேசு யூதர்களால் கைதுசெய்யப்பட்டு முதன்முதலாக அழைத்துச் செல்லப்பட்டது,
(1) பிலாத்துவின் முன்னிலைக்காகும். (2) பிறத்தோரியத்திற்காகும்.
(3) ஏரோதின் முன்னிலைக்காகும். (4) தலைமைக் குருவின் வீட்டிற்காகும்.

**5.** 'பெந்தகோஸ்தே' என்பதன் கருத்து
(1) முப்பது என்பதாகும். (2) முப்பத்து மூன்று என்பதாகும்.
(3) நாற்பது என்பதாகும். (4) ஐம்பது என்பதாகும்.

**6.** புனித ஸ்தேவானைக் கல்லால் எறிந்து கொன்றபோது அதற்கு உடந்தையாக இருந்தவர்,
(1) சவுல் ஆவார். (2) பிலிப்பு ஆவார்.
(3) யாக்கோபு ஆவார். (4) கொர்னேலியு ஆவார்.

**7.** "அஞ்சாதே. இது முதல் நீ மனிதனைப் பிடிப்பவன் ஆவாய்." இயேசு இவ்வாறு கூறியது
(1) புனித யோவானுக்கு ஆகும். (2) புனித பேதுருவிற்கு ஆகும்.
(3) புனித அந்திரேயாவிற்கு ஆகும். (4) புனித யாக்கோபுவிற்கு ஆகும்.

**8.** உலகளாவிய திருச்சபை ஒரு இனத்திற்கோ, ஒரு தேசத்திற்கோ அல்லது ஒரு பிரதேசத்திற்கோ வரையறுக்கப்பட்டதல்ல. இதனைக் குறிப்பது
(1) ஏகம் என்றாகும். (2) பரிசுத்தம் என்றாகும்.
(3) கத்தோலிக்கம் என்றாகும். (4) அப்போஸ்தலிக்கம் என்றாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**9.** அருளடையாளங்களின் அருளடையாளம் என அறிமுகம் செய்யப்படுவது,
(1) ஒப்புரவு ஆகும். (2) திவ்விய நற்கருணை ஆகும்.
(3) குருத்துவம் ஆகும். (4) மெய்விவாகம் ஆகும்.

**10.** கிறிஸ்துநாதர் தமது திருத்தூதர்களின் காலடிகளைக் கழுவும் நிகழ்வைக் குறிப்பிடும் நற்செய்தியாளர்,
(1) புனித யோவான் ஆவார். (2) புனித லூக்கா ஆவார்.
(3) புனித மத்தேயு ஆவார். (4) புனித மாற்கு ஆவார்.

**11.** எக்காலத்திற்குமுரியதும், அளவில்லாததும், நித்தியமானதும், தூய்மையானதுமான பலி
(1) தானியப் பலி ஆகும். (2) நல்லுறவுப் பலி ஆகும்.
(3) கல்வாரிப் பலி ஆகும். (4) மெல்கிசெதேக்கின் பலி ஆகும்.

**12.** இன மத பேதமின்றி யூத செபக்கூட்டத்திற்கும், இஸ்லாமிய பள்ளிவாசலுக்கும் சென்ற முதலாவது மேன்மைதங்கிய திருத்தந்தை
(1) முதலாம் அருளப்பர் சின்னப்பர் ஆவார்.
(2) இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் ஆவார்.
(3) எட்டாம் பத்திநாதர் ஆவார்.
(4) ஒன்பதாம் பத்திநாதர் ஆவார்.

**13.** "ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார்." இவ்வாறு கூறப்பட்டது
(1) மரியன்னையினால் ஆகும். (2) எலிசபெத்தினால் ஆகும்.
(3) மரிய மதலேனாவினால் ஆகும். (4) வெரோணிக்காவினால் ஆகும்.

**14.** சூழலை அழித்தல் எத்தனையாம் கட்டளைக்கு எதிரான பாவமாகும்?
(1) முதலாம் கட்டளைக்கு (2) இரண்டாம் கட்டளைக்கு
(3) நான்காம் கட்டளைக்கு (4) ஐந்தாம் கட்டளைக்கு

**15.** போத்திபாரின் மனைவியின் விருப்பத்திற்கு யோசேப்பு இணங்கியிருப்பின் அவர் மீறும் ஓர் கட்டளை ஆவது,
(1) நான்காம் கட்டளையாகும். (2) ஐந்தாம் கட்டளையாகும்.
(3) ஆறாம் கட்டளையாகும். (4) ஏழாம் கட்டளையாகும்.

**16.** அயலவர்களின் உடமைகளைப் பறித்தெடுக்காமல், முறையாகக் கடனைத் திருப்பிக்கொடுத்து, வியாபாரத்தில் நேர்மையைக் கடைப்பிடிக்க, அறிவுரை வழங்கும் கட்டளைகள்
(1) ஐந்து, ஏழு (2) ஆறு, ஒன்பது (3) ஏழு, பத்து (4) எட்டு, பத்து

**17.** இறைவனிடத்தில் நேர்மையீனமாக நடப்போருக்கு பயங்கரமான தீர்ப்புக் கிடைக்கும் என்பதை எடுத்துக்காட்டுவது
(1) தாவீது மற்றும் கோலியாத்தின் சம்பவம் ஆகும்.
(2) அனனியா மற்றும் சப்பிராளுக்கு இடம்பெற்ற சம்பவம் ஆகும்.
(3) பேதுரு மற்றும் பவுலின் சம்பவம் ஆகும்.
(4) பேதுரு மற்றும் கொர்னேலியு சம்பவம் ஆகும்.

**18.** திருவழிபாட்டு ஆண்டின் பாஸ்கா காலத்திற்கு முன் வரும் காலம்
(1) ஆகமான காலம் ஆகும். (2) தவக்காலம் ஆகும்.
(3) கிறிஸ்து பிறப்புக்காலம் ஆகும். (4) ஆண்டின் பொதுக்காலத்தின் II ம் பகுதி ஆகும்.

**19.** திருப்பலியின் ஆரம்பச் சடங்கிற்குரிய ஒரு பகுதி
(1) முதல் வாசகமாகும். (2) ஆர்ப்பரிப்பாகும்.
(3) மறை உரையாகும். (4) வானவர் கீதமாகும்.

**20.** 'வாழ்க்கையில் அனைத்து முக்கியமான சந்தர்ப்பங்களிலும் செபத்தின் மூலம் நாம் தயாராக வேண்டும்.' என்பது எடுத்துக்காட்டப்படுவது
(1) திருப்புகழ்மாலை செபத்தின் மூலமாகும்.
(2) உன்னத குருவின் வேண்டுதலின் மூலமாகும்.
(3) இயேசு கெத்சமனித் தோட்டத்தில் செபித்ததன் மூலமாகும்.
(4) கர்த்தர் கற்பித்த செபத்தின் மூலமாகும்.



Department of Examinations Sri Lanka

21. பெரிய இறைவாக்கினர், சிறிய இறைவாக்கினர், எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர். இவ்வொவ்வொரு குழுவிற்கும் உரிய இறைவாக்கினர் வீதம் ஒழுங்குமுறையில் குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க.
(1) எசேக்கியேல், எலிசா, ஓசேயா என்பவர்களாவர்.
(2) எசாயா, ஆமோஸ், எலியா என்பவர்களாவர்.
(3) ஆமோஸ், எலியா, நாத்தான் என்பவர்களாவர்.
(4) எரேமியா, நாத்தான், மீக்கா என்பவர்களாவர்.

22. "மானிடா, நான் உனக்குத் தருகின்ற இச்சுருளேட்டைத் தின்று உன் வயிற்றை நிரப்பு." என்று கூறப்பட்டது
(1) எசாயா இறைவாக்கினருக்காகும்.
(2) எரேமியா இறைவாக்கினருக்காகும்.
(3) எசேக்கியேல் இறைவாக்கினருக்காகும்.
(4) யோனா இறைவாக்கினருக்காகும்.

23. இயேசு இறைமகன் எனவும், அவர்மீது நம்பிக்கை கொள்வதன் மூலம் நிறைவாழ்வை அடையலாம் எனவும் வலியுறுத்தும் நற்செய்தி எழுத்தாளர்
(1) புனித மாற்கு ஆவார்.
(2) புனித மத்தேயு ஆவார்.
(3) புனித லூக்கா ஆவார்.
(4) புனித யோவான் ஆவார்.

24. பெண்ணை ஆணின் விலா எலும்பிலிருந்து படைத்ததன் மூலம் கருதப்படுவது யாது?
(1) பெண் ஆணின் அடிமையோ அல்லது அவனை விட உயர்ந்தவளோ அல்ல அவனுக்குத் துணையானவள் என்பதாகும்.
(2) விலா எலும்பு இதயத்திற்கு நெருங்கியதாகையால் அன்பாகவும், ஒற்றுமையாகவும் வாழவேண்டும் என்பதாகும்.
(3) பெண் மற்றும் ஆண் என்னும் இருவரும் இறைவனின் படைப்பு என்பதாகும்.
(4) மனித மாண்பு பேணப்படும் விதத்தில் பெண் மற்றும் ஆண் வேறுபாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதாகும்.

25. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - "நீ மண்ணில் பயிரிடும் பொழுது அது இனிமேல் உனக்குப் பலன் தராது"
B - "நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்குத் திரும்புவாய்"
C - "மண்ணுலகில் நீ நாடோடியாக அலைந்து திரிவாய்"
D - "முட்செடியையும், முட்புதரையும் உனக்கு அது முளைப்பிக்கும்"
மேற்கூறிய வெளிப்பாடுகளில் இறைவன் காயினுக்குக் கொடுத்த தண்டனைகளைக் குறிப்பிடும் விடை
(1) A யும் B யும் ஆகும்.
(2) A யும் C யும் ஆகும்.
(3) B யும் C யும் ஆகும்.
(4) B யும் D யும் ஆகும்.

26. மூன்றாம், ஐந்தாம், ஏழாம் பெரும் துன்பங்களை வரிசைப்படி குறித்துக்காட்டும் விடை
(1) கொசுக்களின் தொல்லை - கொப்புளங்கள் தோன்றுதல் - வெட்டுக்கிளிகள் பரவுதல்
(2) ஈக்களின் பெருக்கம் - கால்நடை சாவு - காரிருள் உருவாதல்
(3) கொசுக்களின் தொல்லை - கால்நடை சாவு - கல்மழை
(4) கால்நடை சாவு - கல்மழை - வெட்டுக்கிளிகள் பரவுதல்

27. "அவர் ஆண்டவர் பார்வையில் பெரியவராய் இருப்பார். திராட்சை மதுவோ வேறு எந்த மதுவோ அருந்தமாட்டார்" புனித லூக்கா நற்செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்படுவது,
(1) மோசே பற்றியாகும்.
(2) ஆபிரகாம் பற்றியாகும்.
(3) யாக்கோபு பற்றியாகும்.
(4) திருமுழுக்கு யோவானைப் பற்றியாகும்.

28. இயேசு இறையாட்சியின் மதிப்பீடுகளை உவமைகள் மூலம் கற்பித்தார் என்பதை உறுதிப்படுத்துவதற்கு உதாரணமான ஓர் உவமை
(1) வயலில் தோன்றிய களைகள் பற்றியதாகும்.
(2) காணாமற்போன ஆடு பற்றியதாகும்.
(3) மினா நாணயம் பற்றியதாகும்.
(4) நல்ல சமாரியர் பற்றியதாகும்.

29. "கனிவுடையோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள்
(1) கடவுளைக் காண்பர்."
(2) நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்."
(3) கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்."
(4) விண்ணரசை உரிமையாக்கிக் கொள்வர்."

30. உண்மையாகவே மனம் வருந்தி, மனம் மாறியவராக ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுபவர்,
(1) ஆடை அற்றோருக்கு ஆடை அளிப்பார்.
(2) பாவத்தில் விழாமல் வாழ்வார்.
(3) உடையை அல்ல உள்ளத்தைக் கிழித்துக்கொள்வார்.
(4) தமக்குக் குற்றம் இழைத்தோருக்கு மன்னிப்பு அழிப்பார்.

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**31.** ஒப்புரவு அருளடையாளத்தின் மூலம்
(1) ஆன்மாவில் அழியாத முத்திரை ஒன்று பதிக்கப்படுகின்றது.
(2) முறித்த உறவு மீண்டும் கட்டியெழுப்பப்படுகின்றது.
(3) பணிக்குருத்துவத்தில் பங்காளர் ஆகிறோம்.
(4) மறைப்பரப்புப் பணி ஒப்படைக்கப்படுகின்றது.

**32.** 'திருமண ஒப்பந்தம்' முறிவு செய்ய முடியாத ஓர் உடன்படிக்கை ஆவதோடு அதற்கான முக்கிய தேவை,
(1) பெற்றோரின் ஆசியைப் பெற்றுக்கொள்ளுவதாகும்.
(2) திருமண வாக்குறுதியை குரல் எழுப்பிக் கூறுவதாகும்.
(3) திருமுழுக்குப் பெற்ற இருவராக இருத்தலாகும்.
(4) சாட்சிகள் முன்னிலையில் இடம்பெறுவதாகும்.

**33.** ஏகாந்திகள் அல்லது வனத்துப் பிதாக்கள் என அழைக்கப்பட்டவர்களில் முதன்மையானவர்
(1) ஆசீர்வாதப்பர் ஆவார். (2) தேப்ஸ் சின்னப்பர் ஆவார்.
(3) அகுஸ்தினார் ஆவார். (4) அம்புறோஸ் ஆவார்.

**34.** கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வியின்படி குருத்துவ, துறவற, பொது நிலையினர் அனைவரதும் இறைவாக்குப் பணியின் பிரதான பணியாக விளங்குவது
(1) மறையை அறிவித்தலாகும். (2) மனநிலையை வளர்த்தலாகும்.
(3) அனைவரையும் அன்புசெய்தலாகும். (4) ஆயத்துவப் பணியாகும்.

**35.** அதிமேன்மை தங்கிய லியோ ஜோசப் கருதினால் காடையின் ஆண்டகையால் ஆரம்பிக்கப்பட்டது,
(1) திருப்பாலத்துவ சபையாகும். (2) புதுவாழ்வு இயக்கமாகும்.
(3) மரியாயின் சேனையாகும். (4) கத்தோலிக்க மாணவர் இயக்கமாகும்.

**36.** இயேசு தமது சீடர்களுக்குக் கற்பித்த செபம், குறிப்பிடப்பட்டுள்ள நற்செய்திகள் இரண்டுமாவன
(1) மாற்கு, மத்தேயு நற்செய்திகளாகும். (2) மாற்கு, லூக்கா நற்செய்திகளாகும்.
(3) லூக்கா, யோவான் நற்செய்திகளாகும். (4) லூக்கா, மத்தேயு நற்செய்திகளாகும்.

**37.** இயேசு கற்பித்த செபத்தைச் செபிக்கும் முன் நாம் செய்ய வேண்டிய செயல் என்ன?
(1) கரங்களை உயர்த்துதல்.
(2) எமக்குக் குற்றம் புரிந்த அனைவரையும் மன்னித்தல்.
(3) அன்றாட உணவை எமக்கு என்றும் பெற்றுத் தருவதை நம்புதல்.
(4) இறைவனின் திருப்பெயருக்கு வணக்கம் செலுத்துதல்.

**38.** மரியன்னை கேட்டுக்கொண்டதன்படி நாம் மனம் திரும்பவும் பிறர் மனம் திரும்பவும் என்ன செய்ய வேண்டும்?
(1) உண்மையான மனம் வருந்துதலை ஏற்படுத்திக் கொள்ளுதல்.
(2) ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.
(3) தினமும் செபமாலையை செபித்தல்.
(4) திவ்விய நற்கருணை வழிபாட்டில் பங்குபற்றுதல்.

**39.** இரவு வேளை திருப்புகழ்மாலையில் பாடப்படும் புகழ்ச்சிப்பாடல்
(1) செக்கரியாவின் பாடல் (2) மரியாவின் பாடல்
(3) மோசேயின் பாடல் (4) சிமியோனின் பாடல்

**40.** கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலின்படி தியானம் என்பது தேடலாகும். இத்தேடலில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய இரு விடயங்களையும் எடுத்துக்காட்டும் சரியான விடையைத் தெரிவுசெய்க.
A - தியானத்திற்கு நூல்களைப் பயன்படுத்திக் கொள்ளுதல்
B - கிறிஸ்தவ வாழ்வின் குறிக்கோள்
C - கிறிஸ்தவ வாழ்வு வாழ வேண்டிய முறை
D - திருவிவிலியத்தைத் தியானித்தல்
(1) A, B (2) A, C (3) B, C (4) B, D

**



Department of Examinations Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**14 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023 (2024)

කතෝලික ධර්මය I, II
கத்தோலிக்கத் திருமறை I, II
Catholicism I, II

## கத்தோலிக்கத் திருமறை II

* **முதலாம்** வினாவுக்கும் மேலும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* முதலாம் வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவுக்கும் **10** புள்ளிகளும் உரித்தாகும்.

**1.** (i) திருவெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்புகள் **இரண்டு** எழுதுக.

(ii) பெந்தக்கோஸ்தே நாளில் தூய ஆவியினால் நிரப்பப்பெற்ற இயேசுவின் திருத்தூதர்களில் ஏற்பட்ட மாபெரும் மாற்றங்கள் **இரண்டினை** எழுதுக.

(iii) புனித பவுல் தமது இரண்டாவது மறை தூதுரைப் பயணத்தின்போது போதித்த **இரு** நகரங்களின் பெயர்களைத் தருக.

(iv) திருச்சபை மூவொரு கடவுளுடன் தொடர்புறும் விதத்தை **இரு** விடயங்கள் மூலம் எடுத்துக்காட்டுக.

(v) கடவுள் மானிடரைத் தம் உருவிலும், சாயலிலும் படைத்து ஆசிவழங்கிக் கூறிய வார்த்தைகளில் அடங்கிய விடயங்கள் **இரண்டினை** எழுதுக.

(vi) இஸ்ராயேல் இனத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு எகிப்திய அரசன் மேற்கொண்ட செயற்பாடுகள் **இரண்டினை** எழுதுக.

(vii) இயேசு திருமுழுக்குப் பெற்றபோது வானத்திலிருந்து ஒலித்த குரல் மூலம் வெளிப்படுத்தப்பட்டது என்ன?

(viii) கத்தோலிக்க திருமணத்தின் ஒரு நோக்கமான அன்னியோன்னிய அன்பால் முழுமையடைதல் பற்றி **இரு** கருத்துக்கள் எழுதுக.

(ix) யாரேனும் ஒருவரது ஆன்மீக நன்மை கருதி செய்யக்கூடிய இரக்கச் செயல்கள் **இரண்டினை** எழுதுக.

(x) புனித மத்தேயு நற்செய்தியில் இயேசுவின் போதனைகளின் படி சமாதானத்தைக் கட்டியெழுப்பத் தேவையான **இரு** விடயங்களை எழுதுக.

**2.** (i) ஒல்லாந்தர் இலங்கையில் கரையோரப் பகுதியை ஆட்சி செய்த காலத்தில், அப்பிரதேசத்தில் வாழ்ந்த கத்தோலிக்கருக்கு முகங்கொடுக்க நேர்ந்த இன்னல்கள் **இரண்டினை** எழுதுக.

(ii) ஆங்கிலேயர் காலத்தில் இந்நாட்டில் பணிபுரிய வருகை தந்த மறைபரப்புச் சபைகள் **மூன்றின்** பெயர்களைத் தருக.

(iii) பாடசாலை மாணவர்களிடையே நற்செய்தியைப் பரப்புவதில் நீர் எவ்வாறு பங்குகொள்வீர் என்பதை **ஐந்து** விடயங்கள் மூலம் விளக்குக.

**3.** (i) பிள்ளைகள் மட்டில் பெற்றோரின் கடமைகள் **இரண்டினை** எழுதுக.

(ii) பெற்றோர் மட்டில் பிள்ளைகளின் கடமைகள் **மூன்றினை** எழுதுக.

(iii) நண்பர்கள் மட்டில் உமக்குள்ள கடமையை நிறைவேற்றிய சந்தர்ப்பங்கள் **ஐந்தினை** சுருக்கமாக விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

4. (i) "லிட்டர்ஜியா" (திருவழிபாடு) என்னும் கிரேக்கச் சொல் உருவாகிய 'லாஓஸ்' மற்றும் 'எர்கோன்' என்னும் **இரு** சொற்களினதும் கருத்துக்களை எழுதுக.

(ii) தவக்காலம் பற்றித் தரப்படும் விளக்கங்கள் **மூன்றினை** எழுதுக.

(iii) ஒரு பாடசாலை மாணவராகத் தவக்காலத்தை உமது பங்கில் கருத்துள்ளதாக அமைத்துக் கொள்ள உம்மால் செய்யக்கூடியவை **ஐந்தினை** சுருக்கமாக விளக்குக.

5. (i) இயேசு தமது தூதுப்பணியின்போது நோயாளர்களைக் குணமாக்கிய **இரு** சந்தர்ப்பங்களை எழுதுக.

(ii) நோயில் பூசுதல் அருளடையாளத்தின் மூலம் கிடைக்கும் இறையருள் **மூன்றினை** எழுதுக.

(iii) நோய்வாய்ப்பட்டு சமுதாயத்தில் ஏழ்மை நிலையில் இருப்பவர்களுக்கு உம்மால் செய்யக்கூடிய நற்செயல்கள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக.

6. (i) படைப்பு பற்றிய இரண்டாவது கதையில் இறைவன் மனிதனுக்குக் கொடுத்த பொறுப்புக்கள் **இரண்டினையும்** குறிப்பிடும் எரேபியச் சொற்களையும், அதன் கருத்துக்களையும் எழுதுக.

(ii) உள்ளார்ந்த சமாதானத்திற்கு அடிப்படையாக அமையும் காரணிகள் **மூன்றினை** எழுதுக.

(iii) இலங்கைத் திருச்சபைக்குள் கிறிஸ்தவ மறைக்காக உம்மால் செய்யக்கூடிய பணிகள் **ஐந்தினை** எழுதி சுருக்கமாக விளக்குக.

7. பின்வரும் தலைப்புக்களில் **இரண்டினைத்** தெரிவுசெய்து சிறுகுறிப்பு எழுதுக.

(i) எழுத்து வடிவம் பெற்ற இறைவெளிப்பாடான திருவிவிலியம்

(ii) உன்னத குருவின் வேண்டுதலில் இயேசு தமக்காக செய்த வேண்டுதலில் உள்ளடங்கிய விடயங்கள்

(iii) விடுதலைப் பயணத்தில் இறை பராமரிப்பு

(iv) "போரை வெறுத்து சமாதானத்தின் கருவி ஆவோம்"

* * *

Department of Examinations Sri Lanka